இன்றைய செய்தி நாளைய வரலாறு



கலைஞர் 100 1924 - 2024

முரசொலி

Murasoli

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

www.murasoli.in

murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 85 – ஒலி : 73 – திருவள்ளுவர் ஆண்டு 2057 – ஐப்பசி 06 – வெள்ளிக்கிழமை 23 அக்டோபர் 2026 – திருச்சி ★★ 8 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 85 - Issue 73 : Thiruvalluvar Year - 2057 - Ippasi 06 - Friday 23 October 2026 - Trichy ★★ 8 Pages ₹ 5.00

காவல்துறை: சட்டத்தை நிலைநாட்டும்

காவலர்களின் அளப்பரிய தியாகத்தைப் போற்றுவோம்!

காவலர் வீரவணக்க நாளையொட்டி கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் பதிவு!

சென்னை, அக். 23-

“காவல்துறை: சட்டத்தை நிலைநாட்டும் காவலர்களின் அளப்பரிய தியாகத்தைப் போற்றுவோம்” என்று காவலர் வீரவணக்க நாளையொட்டி கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது சமூக வலை தளத்தில் பதிவிட்டுள்ளார்.

இதுகுறித்து கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களின் சமூக வலை தளப் பதிவு வருமாறு :-

“காவல்துறை: சட்டத்தை நிலைநாட்டும் அமைப்பு மட்டுமல்ல; நமது சமூகத் தின் நம்பிக்கை மற்றும் பாதுகாப்பு அரண்!

காவலர்கள் ஆற்றும் கடமையையும் அவர்களது அளப்பரிய தியாகத்தை யும் வீரவணக்க நாளில் நன்றியோடு நினைவு கூர்வோம்!

மக்களின் பாதுகாப் புக்காகவும் அமைதியான வாழ்வுக்காகவும் ஆபத்து களை எதிர்கொண்டு, அர்ப்பணிப்புணர்வோடு கடமையாற்றி இன்னுயிர் ஈந்த காவலர்கள் அனைவருக்கும் எனது வீரவணக்கம்!”

இவ்வாறு கழகத் தலை வர் மு.க.ஸ்டாலின் அவர் கள் தமது சமூக வலை தளத்தில் பதிவிட்டுள்ளார்.



உடை மாற்றக்கூட அனுமதிக்காமல் அதிகாலை 5 மணிக்கே ஒரு பெண்ணை கைது செய்வதுதான்

பெண்களுக்குப் பாதுகாப்பு அளிக்கும் முறையா?

நாம் தமிழர் கட்சி வேட்பாளர் கைது குறித்து கனிமொழி ராஜாத்தி கருணாநிதி எம்.பி. கண்டனம்!

சென்னை, அக். 23-

“அதிகாலை 5 மணிக்கே, உடை மாற்றக்கூட அனுமதிக்காமல் ஒரு பெண்ணைக் கைது செய்வது தான் பெண்களுக்குப் பாதுகாப்பு அளிக்கும் முறையா?” என கனிமொழி ராஜாத்தி கருணாநிதி கேள்வி எழுப்பியுள்ளார்.

தி.மு.க. துணைப் பொதுச்செய லாளரும், நாடாளுமன்ற தி.மு.க. குழுத் தலைவருமான கனிமொழி ராஜாத்தி கருணாநிதி நேற்று முன்தினம் காலை அண்ணா அறி வாலயத்தில் செய்தியாளர்களைச் சந்தித்தார்.

இந்தச் செய்தியாளர் சந்திப்பில் அவர் கூறியதாவது:-

தாராபுரம் தொகுதி இடைத்தேர் தலில் நாம் தமிழர் கட்சி சார்பில் போட்டியிட்ட கார்த்திகா, வேண்டு மென்றே காழ்ப்புணர்ச்சியின் கார ணமாகக் கைது செய்யப்பட்டுள் ளார். இது திட்டமிட்ட பழிவாங்கும் நடவடிக்கை மட்டுமல்ல, முழுமை யான அத்துமீறல். ஏனெனில் இடைத்தேர்தலின்போது பதிவான ஒரு வழக்குக்காக, அதிகாலை 5 மணிக்கே ஒரு பெண்ணை கைது செய்ய வேண்டிய அவசரம் என்ன? அதிலும், கார்த்திகாவை உடை மாற்றுவதற்குக்கூட அனு மதிக்காமல் கைது செய்ய வேண் டிய அவசியம் என்ன. இந்தக் கைது நடவடிக்கையின் பின்ன ணியில் என்ன இருக்கிறது என்ற கேள்வி எழுகிறது.

கைதுக்கு உண்மையான நோக்கம் என்ன?

இவர்கள் தொடர்ந்து சமூக வலைதளங்களில் பெண்களை அவதூறாகப் பேசிக்கொண்டிருக் கிறார்கள். அப்படியிருக்கும்போது,



இந்தக் கைது நடவடிக்கையின் உண்மையான நோக்கம் என்ன என்பதைப் பொதுமக்களுக்குத் தெளிவுபடுத்த வேண்டும். எங்க ளுடைய மேயர் பிரியா அவர் களாக இருக்கட்டும், திராவிட முன் னேற்றக் கழகம் மற்றும் மற்ற எதிர்க்கட்சிகளைச் சேர்ந்த பெண் களாக இருக்கட்டும், அவர்களைப் பற்றி சமூக வலைதளங்களில் தொடர்ந்து மிகவும் கீழ்த்தரமான கருத்துகளும், அவதூறான பதிவு களும் வெளியிடப்பட்டு வருகின்றன.

இதுதொடர்பாக நாங்களும் பலமுறை புகார் அளித்திருக்கிறோம். ஆனால், எந்தவிதமான நடவடிக் கையும் இதுவரை எடுக்கப்பட வில்லை. அதேநேரத்தில், முதல மைச்சருக்கு மனவருத்தம் ஏற் படும் வகையில் ஏதேனும் நடந்து விட்டால், உடனடியாக அவர்கள் மீது கைது நடவடிக்கை எடுக்கப் படுகிறது.

எதிர்க்கட்சியினருக்கு ஒரு நீதி! ஆளுங்கட்சியினருக்கு ஒரு நீதியா?

அதேபோல, ஆளுங்கட்சியைச் சேர்ந்தவர்களே தங்களுடைய கட்சியினரையும், மற்றவர்களை யும் மிகவும் தரம் தாழ்ந்து விமர் சித்துப் பேசும்போது, அவர்கள் மீது என்ன நடவடிக்கை எடுக்கப் பட்டிருக்கிறது. பெண் அமைச்ச ரான ஜெகதீஸ்வரி பேசிய கருத்து களைக்கூட நாம் கேட்டிருக்கிறோம். அப்படிப் பேசியவர்கள் மீது என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

அதேபோல, ஒரு அமைச்சர் கிரிக்கெட் போட்டியின்போது குழந் தைக்கு மருந்து கொடுப்பதாகக் கூறிய சம்பவத்திலும், அது போதைப்பொருள் என்று சந்தே கிக்கப்படும் வகையில் காட்சிகள் இருப்பதாகக் கூறப்படும் நிலை யில், இதுவரை என்ன நடவ டிக்கை எடுக்கப்பட்டுள்ளது என தெளிவுப்படுத்த வேண்டும். உண் மையில் எதிர்க்கட்சியினருக்கு ஒரு நீதி, ஆளுங்கட்சியினருக்கு ஒரு நீதியா?

நயினார் நாகேந்திரனுக்கு எதிராக நடவடிக்கை எடுக்க தைரியம் உண்டா?

பா.ஜ.க.வின் தமிழ்நாடு தலை வராக இருக்கக்கூடிய நயினார் நாகேந்திரன், முதல்வர் விஜய் குறித்து தனிப்பட்ட முறையில் விமர்சித்துப் பேசியிருக்கிறார். அப்படிப் பேசியதற்காக அவர் மீது ஏதேனும் நடவடிக்கை எடுக்கப் பட்டதா, அவருக்கு எதிராக நடவ டிக்கை எடுக்கும் துணிச்சல் இருக் கிறதா என்ற கேள்வியை நான் எழுப்புகிறேன்.

ஆனால், தொடர்ந்து திராவிட முன்னேற்றக் கழகத்தையும், மற்ற எதிர்க்கட்சிகளையும் சேர்ந்த வர்கள் கைது செய்யப்படுவதுடன், அவர்கள் மீது பழிவாங்கும் நடவ டிக்கைகள் மேற்கொள்ளப்படுவ தாகவும் குற்றச்சாட்டுகள் எழுகின் றன. அந்த வகையில், தாராபுரம் தொகுதி இடைத்தேர்தலில் போட்டி யிட்ட வேட்பாளர் கார்த்திகாவின் கைது நடவடிக்கையும் பழிவாங் கும் நோக்கத்துடன் மேற்கொள் ளப்பட்டதாகவே பார்க்கப்படுகிறது.

அதுவும் அதிகாலை 5 மணிக்கே ஒரு பெண்ணை, உடை மாற்றுவதற்குக்கூட அனு மதிக்காமல் கைது செய்திருப்பது தான் பெண்களுக்குப் பாதுகாப்பு அளிக்கும் முறையா என்ற கேள்வி அனைவரின் மனதிலும் எழுகிறது. எதிர்க்கட்சிகளில் இருக்கக்கூடிய பெண்கள் மீது சட்டரீதியாகவும், காவல்துறையைப் பயன்படுத்தி யும், சமூக வலைதளங்கள் மூல மாகவும் தொடர்ந்து தாக்குதல்கள் நடத்தப்படுவதாகக் குற்றச்சாட்டு கள் முன்வைக்கப்படுகின்றன. இத்தகைய நடவடிக்கைகள் ஜனநாயகத்திலும், பெண்களின் பாதுகாப்பிலும் பல்வேறு கேள்வி களை எழுப்புகின்றன.

மக்களை திசைதிருப்பவே கைது நடவடிக்கை!

அக்டோபர் 7ஆம் தேதி நடை பெற்ற கட்சி நிகழ்ச்சியில், தமிழக முதலமைச்சர் சி.ஜோசப் விஜய் குறித்து பொதுமேடையில் பேசிய விவகாரத்தை இப்போது பெரிது படுத்துவதற்குப் பின்னால் அரசி யல் நோக்கம் உள்ளது. தற்போது ஆளுங்கட்சியைச் சேர்ந்த நிர்வாகி ஒருவரின் வீட்டிலிருந்தே சுமார் 135 கிலோ போதைப்பொருள் கைப்பற்றப்பட்டுள்ளது.

இந்நிலையில், இந்த விவகா ரத்தில் த.வெ.க. கட்சியைச் சேர்ந்த பலருக்குத் தொடர்பிருப்பதாகவும் குற்றச்சாட்டுகள் எழுந்துள்ளன. இத்தகைய விவகாரங்களிலிருந்து மக்களின் கவனத்தைத் திசை திருப்புவதற்காகவே, தற்போது இந்தப் பிரச்சினையைப் பெரிது படுத்துகின்றனர்.

பொதுவெளியில் பேச்சு! நான் கண்டித்திருக்கிறேன்!

இதுதொடர்பாக, ஒரு அமைச் சர் பொதுவெளியில் உண்மைக் குப் புறம்பான தகவலைப் பதி விட்டு, நான் அதைக் கண்டிக்க வில்லை; யாருமே அதைக் கண் டிக்கவில்லை என்று கூறுகிறார். இவ்வாறு உண்மைக்குப் புறம் பான கருத்துகளைத் தெரிவிக்கும் அமைச்சர் மீது என்ன நடவ டிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

உண்மையில், சம்பந்தப்பட்ட மேடையிலேயே மாவட்டக் கழகச் செயலாளர் சேகர்பாபு, அப்படிப் பேசக்கூடாது என்று தெளிவாக எடுத்துரைத்திருக்கிறார். நானும் அத்தகைய கருத்துகளைப் பேசு வது நாகரிகமான செயல் அல்ல என்பதைச் சுட்டிக்காட்டிக் கண்டித் திருக்கிறேன்.

ஆனால், இந்த விவகாரத்தில் ஒரு பெண்ணைக் கைது செய்யும் முயற்சியில் இறங்கியிருப்பதுடன், அவர் மீது வழக்கும் பதிவு செய்தி ருக்கிறார்கள். அதேபோல, உடல் நலக் குறைவால் பாதிக்கப்பட்டுள்ள சம்பந்தப்பட்ட பகுதிச் செயலாளர் மீதும் வழக்குப் பதிவு செய்து, அவரைக் கைது செய்வதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறார்கள்.

ஆனால், இதேபோன்று ஆளுங் கட்சியினரை விமர்சித்துப் பேசும் பாஜகவினருக்கு எதிராக நடவ டிக்கை எடுக்க இவர்களுக்குத் துணிச்சல் கிடையாது. பொது வெளியில் ஓர் அமைச்சர்

தொடர்ச்சி 3-ஆம் பக்கம்

தலைமைத் தேர்தல் ஆணையர் ஞானேஷ்குமார் பதவி நீக்கம்:

குடியரசுத் தலைவருக்கு தி.மு.க. கடிதம்!

சந்திக்க நேரம் ஒதுக்க வலியுறுத்தல்!

புதுடெல்லி, அக். 23-

எஸ்.ஐ.ஆர். மோசடியில் தலைமைத் தேர்தல் ஆணை யர் ஞானேஷ் குமாருக்கு எதிராக நேரில் புகார் அளிக்க நேரம் கேட்டு குடியரசுத் தலைவருக்கு தி.மு.க. கடிதம் எழுதியுள்ளது.

தி.மு.க. தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையில் தி.மு.க. நாடாளுமன்ற உறுப்பினர் கள் கூட்டம் கடந்த 17ஆம் தேதி சென்னை அண்ணா அறிவாலயத்தில் நடை பெற்றது.

தலைமைத் தேர்தல் ஆணையர் பதவிநீக்கம் செய்யப்பட வேண்டும்! S.I.R. ரத்து செய்யப்பட வேண் டும், பழையபடி வாக்குச் சீட்டு முறையில் தேர்தல் கள் நடத்தப்பட வேண்டும் என்பன உள்ளிட்ட 4 முக்கி யத் தீர்மானங்கள் தி.மு.க. எம்.பி.க்கள் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டன.

உலகின் மிகப்பெரும் ஜனநாயகமாகத் திகழும் இந்தியாவில் தேர்தல்களின் மீதான நம்பிக்கை மக்களுக்கு நாளுக்கு நாள் குறைந்து வருகிறது. தேர்தல் ஆணை யத்தின் செயல்பாடுகள் ஒரு தலைப்பட்சமானதாக மாறி வருகிறது.

எனவே, அனைத்து மாநி லங்களிலும் தேர்தலுக்கு முன்பாக அவசரகதியில் நடத்தப்பட்டு, திட்ட மிட்டு வாக்காளர்களை நீக்க வழிசெய்த S.I.R. முழு மையாக இரத்து செய்யப் படவேண்டும் என்று தி.மு.க. எம்.பி.க்கள் கூட்டத்தில் வலியுறுத்தப்பட்டது.

நாடு முழுவதும் மின் னணு வாக்குப்பதிவு இயந் திரங்களின் மீதான நம்பகத் தன்மையும் கேள்விக் குறியாகி உள்ளது. மக்க ளுக்குத் தேர்தல்களின் மீதான நம்பிக்கையை மீட் டெடுக்கவும், தேர்தல் முடி வுகள் நியாயமாக அமைந்தி டவும் மின்னணு வாக்குப் பதிவு இயந்திரங்களுக்கு பதிலாக, பழையபடி வாக் குச்சீட்டு முறையில் தேர்தல் கள் நடத்தப்பட வேண்டும்.

இந்த இரண்டு முக்கிய கோரிக்கைகளையும் வலியு றுத்தி, தி.மு.க. தலைவர் மு.க.ஸ்டாலின் வழிகாட்டு தலின்படி குடியரசுத் தலை வரிடம் தி.மு.க. நாடாளு மன்ற உறுப்பினர்கள் கோரிக்கை மனு அளிக்க உள்ளனர். இதுதொடர் பாக குடியரசுத் தலைவர் திரவுபதி முர்முவை நேரில் சந்திக்க நேரம் கேட்டு, தி.மு.க. பொருளாளரும் மக்களவை தி.மு.க. குழு தலைவருமான டி.ஆர்.பாலு கடிதம் எழுதியுள்ளார்.

நிர்வாகத் திறனற்ற ‘டம்மி’ முதல்வர் ஆட்சியில்

சர்க்கரை விலை உயர்வில் தமிழ்நாடு முதலிடம்!

சென்னை, அக். 23-

ஒன்றிய புள்ளியியல் மற்றும் திட்ட அமலாக்க அமைச்சகத்தின் தரவுகளின் அடிப்படையில், தமிழ்நாடு, ஆந்திரா உள்ளிட்ட 12 மாநிலங்களில் மேற் கொள்ளப்பட்ட ஆய்வில், கடந்த செப்டம்பர் மாதம் சர்க்கரை விலை உயர்வில் தமிழ்நாடு முதலிடத்தில் இருப்பதாக தினத்தந்தி நாளேடு தெரிவித்துள்ளது.

அகில இந்திய அளவில் ஜூலை மாதத்தில் 4.92 சதவீதமாக இருந்த சர்க்கரை விலை உயர்வு, ஆகஸ்ட் மாதத்தில் 24 சதவீதத்தைக் கடந்த தாகவும், செப்டம்பரில் சுமார் 30 சதவீதத்தை எட்டியதாகவும் ஆய்வுத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

தமிழ்நாட்டில் சர்க்கரை உற்பத்தி குறைந்துள்ளதால், கர்நாடகா மற்றும் மகாராஷ்டிரா மாநிலங்களில் இருந்து சர்க்கரை கொள்முதல் செய்ய வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளதாகக் குறிப்பிட்டுள்ள தினத்தந்தி நாளேடு, சென்னையில் சர்க்கரையின் மொத்த விலை கிலோவுக்கு 56 ரூபாயாக உள்ள நிலையில், சில்லறை விலையில் அதைவிட அதிகமாக விற்பனை செய்யப்படுவதாக தெரிவித்துள்ளது